**முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், இராமநாதபுரம்.**

Sc.No. 47/2023

நாள் 30.03.2026

( A2 to A4 ஆஜர். )

அ.த.சா. 20 திரு.சுபாஷ் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இறந்துபோன வெங்கடேசன் மீது பரமக்குடி நகர் காவல் நிலையத்தில் குற்ற வழக்குகள் இருந்தன என்றால் சரிதான். இந்த வழக்கின் எதிரிகள் க்ரைம் Duty போலிசார் என்றால் சரிதான். க்ரைம் Duty போலிசாரை கட்டுப்படுத்துவது சப்டிவிசன் DSP என்றால் சரிதான். அதன்பெயரே சப்டிவிசன் க்ரைம் டீம் ஆகும். க்ரைம் போலிசார் Uniform, Shoe அணிவதில்லை என்றால் நீதிமன்ற பணி மற்றும் escort பணிக்கு போகும்போது அணிவார்கள், மற்ற நேரங்களில் அணிய தேவையில்லை. 03.10.2012ம் தேதி இறந்துபோன வெங்கடேசனை சார்பு ஆய்வாளர் முனியசாமி, காவலர் ஞானசேகரன் காந்திசிலை அருகே துறத்திவரும்போது, காந்திசிலை அருகில் வரும்போது இருசக்கர வாகனத்தில் இருந்து வெங்கடேசன் கீழே விழுந்து, மல்லுக்கட்டித்தான் வெங்கடேசனை பிடித்தார்கள் என்றால் சரிதான்.

03.10.2012ம் தேதிக்கு முதல்நாள் வெங்கடேசன் பரமக்குடி காக்காத்தோப்பு பகுதியில் மற்ற நபர்களுடன் சண்டை போட்டார் என்றால் அந்த விவரம் எனக்குத் தெரியாது. இறந்துபோன வெங்கடேசன் மீது 03.10.2012ம் தேதி காலை 06.00 மணியளவில் சார்பு ஆய்வாளர் முனியசாமி கொடுத்த புகாரின் பேரில் குற்ற எண்.426/2012, பிரிவு 307 இதச வழக்கை நான் பதிவு செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் தான் புலன் விசாரணை அலுவலர்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.30 17:29:43 +0530

என்றால் சரிதான். எதிரி வெங்கசேடன் 01.10.2012 ம் தேதி அவரது குற்ற வழக்கு சம்மந்தமான குற்ற எண்.93/2010, பிரிவு 392 இதச வழக்கில் பரமக்குடி நீதித்துறை நடுவர் முன்பு ஆஜரான விவரம் எனக்குத் தெரியும் என்றால் சரிதான். இறந்துபோன வெங்கடேசன் 01.10.2012 ம் தேதி முதல் 03.10.2012 ம் தேதி அதிகாலை க்ரைம் போலிசார் பிடிக்கும்வரை பரமக்குடியில் தான் இருந்தார் என்றாலும், அவர் மதுரைக்கு செல்லவில்லை என்றாலும் அது பற்றி எனக்குத் தெரியாது. காவல்நிலைய GD entry ஐ பராமரிப்பது station SHO என்றால் சரிதான். அவர் இல்லை என்றால் அதற்கு அடுத்து உள்ள மூத்த அதிகாரி அதை பராமரிப்பார். இறந்துபோன வெங்கடேசன் 03.10.2012 ம் தேதி எமனேஸ்வரம் காவல் நிலையத்தில் வைத்திருந்ததாக சொல்லப்படும் சமயத்தில், சார்பு ஆய்வாளர் முனியசாமியின் பராமரிப்பில் இருந்து வந்தார் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் புலன் விசாரணை மேற்கொள்ளும்போது, 426/2012 குற்ற வழக்கில் எதிரி வெங்கடேசன் பயன்படுத்தியதாக சொல்லப்படும் இருசக்கர வாகனம், கத்தி ஆகியவற்றை கைப்பற்றினேனா என்றால் சார்பு ஆய்வாளர் முனியசாமி காவல் நிலையத்தில் ஒப்படைத்தார்.

ஒரு நபரை கைது செய்து காவல் நிலையத்திற்கு கொண்டுவரும் சமயத்தில் PSR–ல் அவரது உடலில் ஏற்பட்டிருந்த காயங்கள் பற்றி குறிப்பிட வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு குறிப்பிட்டால்தான் அவருக்கு எங்கெங்கு காயங்கள் இருந்தன என்ற விவரம் அறிய இயலும் என்றால் சரிதான். இறந்துபோன வெங்கடேசன் எமனேஸ்வரம் காவல் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்ததாக சொல்லப்படுவது சம்மந்தமாக எனக்கு எமனேஸ்வரம் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் ஆறுமுக நைனார் தொலைபேசியில் தகவல் எதுவும் தெரிவித்தாரா என்றால் ஞாபகம் இல்லை. இறந்துபோன வெங்கடேசனுக்கு உடல்நிலை சரியில்லை என்று எனக்கு முதன்முதலில் தகவல் கொடுத்தது சார்பு ஆய்வாளர் முனியசாமி என்றால் சரிதான். நீதித்துறை



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.30 17:29:46 +0530

நடுவர் என்னை விசாரித்த போது குற்ற எண்.426/2012 ல் புலன் விசாரணை சம்மந்தமான ஆவணங்களை நான் ஒப்படைத்தேனா என்றால் ஞாபகம் இல்லை.

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டவுடன் அதை GD entry யில் பதிவு செய்வது SHO வின் வேலை என்றால் சரிதான். நான் இறந்துபோன வெங்கடேசனை உடல்நிலை சரியில்லாமல் போன சமயத்தில் எங்கு வைத்து முதன்முதலில் பார்த்தேன் என்றால் அரசு மருத்துவமனையில் பார்த்தேன். அப்போது மணி என்ன என்றால் மதியம் 01.15 மணியளவில் இருக்கும்.

வெங்கடேசன் இறந்துபோன பின்பு பரமக்குடி நீதித்துறை நடுவருக்கு தகவல் யாரால் தெரிவிக்கப்பட்டது என்றால் சரியாக ஞாபகம் இல்லை. குற்ற எண்.427/2012 வழக்கில் விசாரணை செய்ய பரமக்குடி நீதித்துறை நடுவர் எத்தனை மணிக்கு பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு வந்தார் என்றால் சரியாக ஞாபகம் இல்லை.

பரமக்குடி நீதித்துறை நடுவர் விசாரணைக்காக எனக்கு எப்போது அழைப்பாணை அனுப்பி என்னை எப்போது விசாரித்தார் என்றால் தேதி தற்போது ஞாபகம் இல்லை.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.30 17:29:50 +0530

மறு விசாரணை – இல்லை.

முதன்மை அமர்வு நீதிபதி ,
இராமநாதபுரம் .